இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
புதன்கிழமை 12-03-2025

# பா.ஜ.க.வை வைத்துச் சொல்கிறாரா எல்.முருகன்?

ஒன்றிய அமைச்சர் எல்.முருகன், 'தமிழ்நாட்டில் பெண்களுக்கு பாது காப்பு இல்லை, சுதந்திரமாக பெண்கள் நடமாட முடியவில்லை' என்று சொல்லி இருக்கிறார்.

வாயைத் திறந்தாலே பொய் சொல்லும் பிறவி அவர். இப்படிப் பேசுவ தற்கு ஏதாவது ஆதாரம் இருக்கிறதா? இல்லை. ஏதாவது அறிக்கை வந்தி ருக்கிறதா? இல்லை. அப்படி தொடர் சம்பவங்கள் நடக்கிறதா? இல்லை. ஆதாரமாக எதையாவது காட்டினாரா எல்.முருகன்? ம்கூம், இல்லை. ஆனால் துணிச்சலாக, கூச்சம் இல்லாமல், 'சுதந்திரமாக பெண்கள் நட மாட முடியவில்லை' என்று ஒரு ஒன்றிய அமைச்சர் பேசுகிறார் என்றால் எத்தகைய மனிதர்களை அமைச்சர்களாக பா.ஜ.க. வைத்திருக்கிறது பாருங்கள்!

**ஒருவேளை பா.ஜ.க. குறித்து இந்தியாவின் பல்வேறு பகுதிகளில் இருந்து வரும் செய்திகளை மனதில் வைத்துச் சொல்கிறாரா எல்.முருகன்?**

* 21.8.2024 அன்று 'தினமணி' நாளிதழ் ஒரு செய்தியை வெளி யிட்டு இருந்தது. 'பாலியல் வழக்குகளில் முதலிடம் வகிக்கும் பா.ஜ.க. உறுப்பினர்கள்' என்று அதற்கு தலைப்பு போட்டிருந்தது. பெண்களுக்கு எதிரான குற்ற வழக்குகளில் உள்ள அரசியல்வாதிகள் குறித்த அறிக் கையை தேர்தல் உரிமை அமைப்பு வெளியிட்டுள்ளதை வைத்து அந்த செய்தியை எழுதி இருந்தது 'தினமணி'. 2019, 2024 தேர்தல்களின் போது இந்தியத் தேர்தல் ஆணையத்தில் தாக்கல் செய்யப்பட்ட பத்திரங் களை முன் வைத்து இந்த ஆய்வு நடத்தப்பட்டுள்ளது. இதில் 16 எம். பி.க்கள், 135 எம்.எல்.ஏ.க்கள் மீது பெண்களுக்கு எதிரான பாலியல் குற் றங்கள் இருப்பது தெரிய வந்துள்ளது. இதில் 54 பேர் பா.ஜ.க.வைச் சேர்ந் தவர்கள் என்கிறது அந்த அறிக்கை. **இதை மனதில் வைத்துத்தான், 'பெண்க ளுக்கு பாதுகாப்பு இல்லை' என்று சொல்கிறாரா எல்.முருகன்?**

* மல்யுத்த வீராங்கனைகளுக்கு பாலியல் தொல்லை கொடுத்ததாக புகார் சொல்லப்பட்ட பிரிஜ் பூஷன், பா.ஜ.க.வின் எம்.பி. அவரை இதில் இருந்து காப்பாற்ற பா.ஜ.க. எடுத்த முயற்சிகளை இந்த நாடு அறியும். **இதை வைத்துச் சொல்கிறாரா எல்.முருகன்?**

* மணிப்பூரில் இரண்டு பெண்கள் நிர்வாணமாக இழுத்துச் செல்லப் பட்டார்களே. அது பா.ஜ.க. ஆட்சி நடக்கும் மணிப்பூரில்தானே நடந்தது? சம்பவம் நடந்து இரண்டு மாதங்கள் கழித்து சமூக ஊடகங்களில் வந்த பிறகுதானே வழக்குப் பதிவு செய்தார்கள்? இது போன்ற குற்றங்களுக்குப் பொறுப்பேற்க வேண்டிய பா.ஜ.க. முதலமைச்சர் பிரேன் சிங்கை இரண்டாண்டு காலமாக காப்பாற்றி வைத்திருந்தார்கள். முடியாத நிலை யில்தான் அவர் பதவி விலகினார். **இதனை மனதில் வைத்துச் சொல்கிறாரா எல்.முருகன்?**

* காங்கிரஸ் கட்சியின் செய்தித் தொடர்பாளர் ஸ்ரீ சக்திசிங் கோஹில் 25.9.2024 அன்று ஒரு பேட்டி கொடுத்தார். "குஜராத்தில் பெண்களுக்கு எதிரான குற்றச் சம்பவங்கள் தொடர்ந்து அதிகரித்து வருகிறது. பிரதமரே குஜராத்தைச் சேர்ந்தவர், அவர் இது பற்றி ட்வீட் செய்வதில்லை, அவரே எதுவும் கூறுவதில்லை, பாதிக்கப்பட்டவர்களின் குரல் டெல்லியின் தாழ்வாரங்களை எட்டவில்லை.

இரண்டு நாட்களுக்கு முன்பு, குஜராத்தின் தாஹோத் மாவட்டம் சிங்வாட் தாலுகாவில் ஒரு அரசு தொடக்கப் பள்ளி உள்ளது. காலையில், பள்ளியின் முதல்வர் ஒரு பெண்ணின் வீட்டின் முன் தனது காரை நிறுத்தி, அவரது தாயிடம் - 'நான் பள்ளிக்குச் செல்கிறேன், உங்கள் மகளை என் னுடன் காரில் உட்காரச் சொல்லுங்கள்' என்று கூறுகிறார். அந்தத் தாய் தனது 6 வயது மகளை அவரின் காரில் உட்கார வைத்தார். அவர் காரை முன்னோக்கி எடுத்துச் சென்றார். பிறகு அந்த சிறுமியை பாலியல் பலாத்காரம் செய்து, பின்னர் அதே காரில் அவளை கழுத்தை நெரித்துக் கொன்றார். இவர் பா.ஜ.க. தலைவர்களுடன் புகைப்படம் எடுத்துக் கொண்டுள்ளார்.

வதோதராவின் அங்கத் கிராமத்தில், ஒரு பா.ஜ.க. தலைவர் ஒரு பெண்ணை அழைத்து, பின்னர் அந்தத் திருமணமான பெண்ணின் வீட்டிற்குச் சென்று, அவளை பாலியல் பலாத்காரம் செய்து, அவள் யாரிட மாவது சொன்னால், அவளைக் கொன்றுவிடுவேன் என்று கூறுகிறார். நேற்று போடாட்டில், மற்றொரு பள்ளியில் ஒரு சிறுமி பாலியல் வன்கொடுமை செய்யப்பட்டாள். பருச்சில், ஐந்து மாதக் குழந்தையை பாலியல் வன்கொடுமை செய்ய முயற்சி நடந்தது. நாம் எங்கே போகிறோம்?

சிந்து பல்கலைக்கழக சர்வதேச இயக்குனர் வெளிநாட்டிலிருந்து வந்த ஒரு பெண்ணை பாலியல் வன்கொடுமை செய்ய முயன்றார். குஜராத் பல்கலைக்கழக வளாகத்தில் உள்ள ஐ.ஏ.எஸ். பயிற்சி மையத்திலிருந்து ஒரு பெண் வெளியே வந்தபோது பாலியல் வன்கொடுமைக்கு ஆளாக்கப் படுகிறார். குஜராத்திலும் வெளியேயும் சட்டம் ஒழுங்கு மற்றும் பெண்கள் மீதான அட்டூழியங்களின் நிலை இதுதான். மோடி ஜி நல்லாட்சி பற்றி பேசுகிறார்" என்று சொல்லி இருக்கிறார். **இதை மனதில் வைத்துச் சொல் கிறாரா எல்.முருகன்?**

* கடந்த மாதம் 14 ஆம் தேதி அன்று பள்ளி மாணவிக்கு பாலியல் தொல்லை கொடுத்ததாக பா.ஜ.க.வின் மாநில நிர்வாகி எம்.எஸ்.ஷா, போக்சோ சட்டத்தில் கைது செய்யப்பட்டார். இவர் அந்தக் கட்சியின் மாநில பொருளாதாரப் பிரிவுத் தலைவராக இருக்கிறார். 15 வயது மாணவிக்கு ஸ்கூட்டர் வாங்கித் தருவதாகச் சொல்லி பாலியல் தொல்லை கொடுத்திருக் கிறார். 'எனது மகளின் செல்போனுக்கு எம்.எஸ்.ஷா ஆபாச தகவல்களை அனுப்பி இருக்கிறார்' என்று அந்த மாணவியின் தந்தை சொல்லி இருக்கி றார். அவரது செல்போன், லேப் டாப் ஆகியவற்றை ஆய்வு செய்த போது அனைத்தும் உண்மை என காவல் துறை உறுதி செய்தது. **இதை மனதில் வைத்துச் சொல்கிறாரா எல்.முருகன்?**

**பெண்கள் மிகப் பாதுகாப்பாக பணியாற்றும் நகரமாக தேர்வு செய்யப் பட்டு இருப்பது சென்னைதான். அதிகளவிலான பெண்கள், பணியாற்றுவதும் தமிழ்நாட்டில்தான். இதனைக் கெடுக்கப் பார்க்கிறது ஒரு கூட்டம். அதற் கான அவதூறு களைத் தான் அறிக்கைகளாக, பேட்டிகளாகக் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள்.**

வைரமுத்தியம்

# கவிப்பேரரசு வைரமுத்து படைப்பிலக்கியம் குறித்த பன்னாட்டுக் கருத்தரங்கம்!

## முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் நிறைவுரை ஆற்றுகிறார்!

சென்னை, மார்ச் 12 - இலக்கியப் பொதுவாழ்வில் கவிப்பேரரசு வைரமுத்து அரை நூற்றாண்டைக் கடந்திருக்கிறார். 53 ஆண்டுகளுக்கு முன்பு 1972இல் அவரது முதல் கவிதை நூலான வைகறை மேகங்கள் வெளிவந்தது. இதுவரை 39 நூல் கள் படைத்திருக்கிறார். 7500 பாடல்கள் எழுதியிருக்கிறார். கள் ளிக்காட்டு இதிகாசம் படைப்புக்கு சாகித்ய அகாடமி விருதையும், இந்தியாவின் உயர்ந்த இலக்கியப் பரிசுகளுள் ஒன்றான சாதனா சம்மான் விருதையும் மற்றும் இலக்கியப் பங்களிப்புக்காக இந்திய அரசின் உயரிய விருது களான பத்மஸ்ரீ பத்மபூஷண் விருதுகளையும் பெற்றிருக்கிறார்.

சிறந்த பாடலுக்கான தேசிய விருதை 7 முறை பெற்ற இந்தியா வின் ஒரே பாடலாசிரியர் இவர் தான். தமிழ்நாட்டு அரசின் மூன்று பல்கலைக்கழகங்களின் கௌரவ டாக்டர் பட்டங்களைப் பெற்றிருக்கிறார். சிறந்த பாடலாசி ரியருக்கான தமிழ்நாட்டு அரசின் 6 விருதுகளையும் பெற்றிருக்கிறார். மூன்று தலைமுறைகள் கடந்து இலக்கியம் செய்து வருகிறார்.

கவிப்பேரரசு வைரமுத்து படைப்புலகம் குறித்த பன்னாட் டுக் கருத்தரங்கம் மார்ச் 16 அன்று சென்னை லீலா பேலஸ் நட்சத்திர விடுதியில் நடைபெறுகிறது. முதல மைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கருத்தரங்கில் நிறைவுரை ஆற்று கிறார். அகில இந்திய அளவிலும் உலக அளவிலும் புகழ்பெற்ற ஆராய்ச்சியாளர்கள் கவிப்பேரரசு வைரமுத்துவின் படைப்புகளை முன்வைத்துப் பல்வேறு தலைப்பு களில் ஆய்வுக் கட்டுரைகள் வழங்குகிறார்கள்.

**ஆங்கிலத்தில் மகாகவி நூல்! ப.சிதம்பரம் வெளியிடுகிறார்!**

உச்சநீதிமன்றத்தின் மாண்பமை நீதியரசர் ஆர்.மகாதேவன் பன் னாட்டுக் கருத்தரங்கைத் தொடங்கி வைக்கிறார். கவிப்பே ரசு வைரமுத்து எழுதி, கடந்த ஆண்டு வெளியான மகாகவிதை நூலை மறைமலை இலக்கு வனார் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்திருக்கிறார். 'Vairamuthu's Mahakavithai' என்ற ஆங்கில நூலை ஒன்றிய முன்னாள் அமைச்சர் ப.சிதம்பரம் எம்.பி. வெளியிடுகிறார். மலேசிய முன் னாள் அமைச்சர் டத்தோஸ்ரீ எம்.சரவணன் எம்.பி. முதற்படி பெற்றுக்கொள்கிறார்.

கருத்தரங்கம் நான்கு அமர்வுக ளாக நடைபெறுகிறது. கவிதை அரங்கு கவிப்பேரரசு வைரமுத்து வின் கவிதைகளை ஆய்வு செய்கி றது. நாவல் அரங்கு கவிப்பேரசு வைரமுத்துவின் நாவல்களைப் பேசுகிறது. கட்டுரை அரங்கு கவிப்பேரரசு வைரமுத்துவின் ஆராய்ச்சிக் கட்டுரைகளைத் திற னாய்வு செய்கிறது. பாடல் அரங்கு கவிப்பேரரசு வைரமுத்துவின் திரைப்பாடல்களின் நயம் பாராட்டு கிறது. சுவிட்சர்லாந்து, சீனா, மலேசியா, சிங்கப்பூர் ஆகிய நாடு களின் தமிழ் அறிஞர்கள் மற்றும் இந்தியாவின் பல்வேறு பல்கலைக் கழகங்களின் பேராசிரியர்கள் உள்ளிட்ட 22 பேர் கருத்தரங்கில் கலந்துகொண்டு கட்டுரை வாசிக் கிறார்கள். தேர்ந்தெடுப்பட்ட கேட்பாளர்கள் மட்டும் கருத்தரங் கில் கலந்துகொள்கிறார்கள். கருத் தரங்கம் காலை முதல் மாலை வரை முழுநாள் நடைபெறுகிறது.

**'வைரமுத்தியம்' முதல்வர் வெளியிட எஸ்.ஜெகத்ரட்சகன் பெற்றுக்கொள்கிறார்!**

மாலையில் நிகழும் நிறைவு விழாவில் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் நிறைவுப் பேருரை ஆற் றுகிறார். அரங்கேற்றம் செய்யப் பட்ட கட்டுரைகளையும், உலக அறிஞர்கள் கட்டுரைகளையும் தொகுத்துத் தயாரிக்கப்பட்ட 'வைர முத்தியம்' என்ற ஆய்வு நூலை முதலமைச்சர் வெளியிடுகிறார்.

பாரத் பல்கலைக்கழக வேந்தர் எஸ்.ஜெகத்ரட்சகன் எம்.பி. முதற்படி பெற்றுக்கொள்கிறார். நிறைவாகக் கவிப்பேரரசு வைர முத்து ஏற்புரை ஆற்றுகிறார்.

டிஸ்கவரி புக் பேலஸின் மு. வேடியப்பன் விழாவை ஒருங்கி ணைத்து வருகிறார். கவிஞர் வைரமுத்து கல்வி அறக்கட்டளை இந்த விழாவுக்கான ஏற்பாடு களைச் செய்து வருகிறது.

# கோத்ரேஜ் நிறுவன உற்பத்தி தொழிற்சாலை...

## முதல்வர் உரை... முதல் பக்கத் தொடர்ச்சி

மேற்கொள்ள சிறந்த மாநிலம், தமிழ்நாடு தான்! இறக்குமதி சார்புகளை வெகுவாக குறைத்து, உள்நாட்டு உற்பத்தியை மேம்படுத்த நாங்கள் பெருமுயற்சிகள் எடுத்துக் கொண்டிருக்கிறோம்! எப்போதும் Positiveஆன சிந்தனையோடு சேர்ந்த Positiveஆன செயல்கள் எல்லாம், வெற்றி யில்தான் முடியும்!

2030ஆம் ஆண்டிற்குள், தமிழ்நாட்டை ஒரு டிரில்லியன் டாலர் பொருளாதாரமாக மாற்ற வேண்டும் என்ற எங்களின் இலட்சிய இலக்கை அடைவதற்கு, அனைத்து முன்முயற்சிகளையும் நம்முடைய திராவிட மாடல் அரசு மேற்கொண்டு வருகிறது.

**தொடர் முயற்சிகளால் பெருமளவு முதலீடு!**

முதலீட்டாளர்களுக்குத் தேவையான, அனைத்து ஆதரவுச் சேவைகளையும் நம்முடைய அரசு செய்து கொண்டிருக்கிறது. அதனால்தான், ஆட்சி பொறுப்பேற்ற இந்த நான்காண்டுகளில், பல்வேறு துறைகளில் பெரும் முதலீடுகளை ஈர்த்திருக்கிறோம். ஒரு செயலை தொடர்ச்சியாக செய்தால், வெற்றி நிச்சயம்! அதைத்தான் நாங்கள் செய்து கொண்டு வருகிறோம்! தொடர்ச்சி யான முயற்சிகளால் தமிழ்நாட்டுக்கு முதலீடுகளை பெருமளவில் ஈர்க்க முடிகிறது. அந்த வகை யில், உங்களின் வருகை, எங்களுக்கு ஊக்கமளிப்ப தாக அமைந்திருக்கிறது!

தமிழ்நாட்டின் வளர்ச்சி என்பது, பொருளாதார வளர்ச்சி மட்டுமல்ல, அனைவரையும் உள்ள டக்கிய, சமூகநீதியை உள்ளடக்கிய வளர்ச்சி என்ற தனித்தன்மை வாய்ந்தது! பெண்கள் முன்னேற்றம் மற்றும் சமத்துவம் போன்ற கொள்கைகளை அடித்தள மாக கொண்ட ஒட்டு மொத்த வளர்ச்சி என்ப தால், தமிழ்நாடு மற்ற மாநிலங்களிலிருந்து தனித்து தெரிகிறது என்று உலகத்திற்கே தெரியும்! அதனால்தான் தமிழ் நாட்டில் முதலீடுகள் வந்து குவிந்து கொண்டிருக் கிறது!

இந்த உற்பத்தித் திட்டத்தின் சிறப்பம்சமாக, 50 விழுக்காடு அளவுக்கு பெண்களுக்கும், திருநங்கைகள் மற்றும் மாற்றுத் திறனாளி களுக்கும் வேலை வாய்ப்பு அளிக்க உள்ளதற்கு உங்களை நெஞ்சார, மனதார நான் பாராட்ட கடமைப்பட்டிருக்கிறேன். அனைத்து மாவட்டங்களும் சீரான வளர்ச்சி பெற வேண்டும் என்று நான் அடிக்கடி குறிப்பிட்டு சொல்லி வருகிறேன். அந்த வகையில், செங்கல்பட்டு மாவட்டத்தில் இந்தத் திட்டம் அமைக்கப் பட்டுள்ளதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன்.

**முதலீடுகளின் முதல் முகவரியாக தமிழ்நாடு விளங்குகிறது!**

இந்த மாவட்டத்தில், வேளாண்மைக்கு நிகராக தொழிற்சாலைகளும், கல்வி நிறுவனங்களும் இருக்கிறது. தகவல் தொழில்நுட்ப பூங்காக்கள் அதிகம் இருப்ப தால், வேலைவாய்ப்பும் அதிகமாக இருக் கிறது. சென்னையின் நுழைவு வாயில் என்று இந்த செங்கல்பட்டு மாவட்டத்தை சொல்வது போன்று, முதலீடுகளுக்கான இந்தியாவின் நுழைவாயிலாக, முதலீடு களுக்கான முதல் முகவரியாக நம்முடைய தமிழ்நாடு விளங்கிக் கொண்டிருக்கிறது.

அதிவிரைவாகவளர்ந்துகொண்டிருக்கும் தமிழ்நாட்டின் வளர்ச்சிப் பயணத்தில் இன்றைக்கு மிக மிக முக்கியமான நாள்! இந்தத் திட்டத்தின் திறப்பு விழா இன்றைக்கு சிறப்போடு நடைபெறுவது, உண்மையில், தமிழ்நாட்டுக்கு பெருமை சேர்க்கும் விதமாக அமைந்திருக்கிறது என்று நான் மீண்டும் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழ்நாட்டின் முதலமைச்சர் என்ற முறையில், உங்களின் திட்டம் முழு வெற்றி அடைய, இந்த அரசு முழுமையான ஆதரவு அளிக்கும் என்று நான் உங்களுக்கு உறுதி யளிக்கிறேன். சாதகமான வணிகச் சூழல், நெறிபடுத்தப்பட்ட நிர்வாக செயல்முறைகள் நிலவக்கூடிய தமிழ்நாட்டில், உங்களின் திட்டங்களை தங்குதடையின்றி செயல் படுத்தலாம். உங்கள் திட்டங்கள் மேலும் விரிவடைய வேண்டும். பல்வேறு வகையில் உயர வேண்டும். பல்வேறு துறைகளில், மேலும் பல புதிய திட்டங்களை நீங்கள் கொண்டு வர வேண்டும்! அவை யெல்லாம் தமிழ்நாட்டில் அமைந்திட வேண்டும் என்று இந்த நேரத்தில் உங்களுக்கு நான் கோரிக் கையாக வைத்து, இந்த நல்லுறவு மென்மேலும் வளர்ச்சி பெறும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது.

அந்த நம்பிக்கையோடு நன்றி கூறி விடைபெறுகிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.



திருச்சிராப்பள்ளி மாநகராட்சி மண்டலம் 3 வார்டு எண் 39,40 பகுதியை இணைக்கும் கவுருகரை வாய்க்காலின் குறுக்கே அமைக்கப்பட்டுள்ள பாலத்தை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி தலைமையில் அமைச்சர் கே.என்.நேரு திறந்து வைத்து மக்களின் பயன்பாட்டிற்கு அர்ப்பணித்து வைத்தார். இந்நிகழ்வில் மு.மதிவாணன், கே.என்.சேகரன், சரவணன், சரவணன், ஜெகஜீவ ராமன், ரெக்ஸ், சிவக்குமார் மற்றும் பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.